**நடுவர் நீதிமன்றம், பாப்பிரெட்டிபட்டி**
**முன்னிலை : திரு.ஐ.சம்பத்,B.A., MSW., LLB.,**
**நீதித்துறை நடுவர் பாப்பிரெட்டிபட்டி**
**2026 ஆம் ஆண்டு ஜுன் 05–ம் நாள் வெள்ளிக்கிழமை**
**CC.No. 46/2023**
**C.N.R.No.TNDP130016682023**

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
பாப்பிரெட்டிப்பட்டி காவல் நிலையம்,
குற்ற எண் : 135/2021 ... குற்றமுறையீட்டாளர்

/எதிரி/

நாராயணசாமி த/பெ கோபால் ... எதிரி

**வழக்கு விபரம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | Name of the Court | Judicial Magistrate, Pappireddipatti | | |
| 2. | Name of the Judge | Thiru.I.Sambath,B.A.,MSW,LLB., | | |
| 3. | Date of Judgment | 05.06.2026 | | |
| 4. | Case Number along with CNR Number | CC.No.46/2023<br>C.N.R.No.TNDP130016682023 | | |
| 5. | Name of the parties of the case | Sub-Inspector of Police, Pappireddipatti Cr.No.135/2021 | | |
| | | Narayanasamy S/o Gopal | | |
| 6. | Date of Occurence | 28.03.2021 | | |
| 7. | Date of Complaint | 08.04.2021 | | |
| 8. | Date of arrest if any and remand | 08.04.2021 | | |
| 9. | Period of Remand of the Accused | 10 days | | |
| 10. | Date if release on bail | 17.04.2021 | | |
| 11. | Date of Final Report | 30.06.2021 | | |
| 12. | Date of Committal of the case to court of Sessions | -Nil- | | |
| 13. | Date of Questioning of the accused U/s. 294(b), 324, 506(1) IPC, 4 of TNPHW Act | 06.02.2024 | | |
| 14. | Date of Examination in Chief and cross examination of the witnesses | Witnesses | Chief | Cross |
| | | PW1<br>PW2 | 21.03.2025<br>21.03.2025 | 21.03.2025<br>21.03.2025 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | PW3<br>PW4<br>PW5<br>PW6<br>PW7 | 15.10.2025<br>07.02.2026<br>07.02.2026<br>02.03.2026<br>15.05.2026 | 15.10.2025<br>07.02.2026<br>07.02.2026<br>02.03.2026<br>15.05.2026 |
| 15. | Date of filing of all miscellaneous petitions and their results including the results on Challenge before the Superior courts except routine petitions like petitions U/S. 317 of code. | --- | | |
| 16. | Date of Examination of the Accused U/s.313 of the code | 18.05.2026 | | |
| 17. | Details of the abscondence of an accused and his appearance / production as the case may be | -Nil- | | |
| 18. | Grant of Stay by Superior Courts and the results there of | -Nil- | | |
| 19. | Date of Commencement of Trial | 21.03.2025 | | |
| 20. | Date of Closure of Trial | 15.05.2026 | | |
| 21. | Date of Sentence of Order | 05.06.2026 | | |
| 22. | Date of Service of Copy of Judgment to the Accused | 05.06.2026 | | |
| 23. | If any delay give Explanation | -Nil- | | |

இவ்வழக்கானது 06.06.2023–ம் தேதி அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணைக்காக 05.06.2026–ம் தேதியன்று வந்தபோது குற்றமுறையீட்டாளர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை–1 செல்வி. V.சண்முகபிரியா,பி.ஏ.,எம்.எல்., அவர்கள் முன்னிலையிலும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.மணி ஆகியோர்களின் முன்னிலையிலும் வழக்கு ஆவணங்கள் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்த பின்னரும் இருதரப்பு வாதுரைகள் கேட்டறிந்த பின்னரும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

1. கடந்த 28.03.2021 ம் தேதி காலை 07.30 மணிக்கு பாப்பிரெட்டிப்பட்டி காவல் நிலைய சரகம் வரதகவுண்டனூர் அருகில் சாட்சி மலர்கொடி என்பவர் அவரது

வீட்டின் முன்புள்ள வாசலுக்கு சாணி தெளித்து கொண்டிருந்தபோது, எதிரி நாராயணசாமி என்பவர் ஏண்டி தேவடியா எனது இடத்துல நீ சாணி தெளிக்கிறாய் என்று தகாத வார்த்தையால் திட்டியுள்ளார், மேலும் இவ்வழக்கின் தொடர்ச்சியாக எதிரி சாட்சி மலர்கொடி என்பவரை கல்லால் தலையின் மீது தாக்கி சொற்பகாயத்தை ஏற்படுத்தியுள்ளார், மேலும் எதிரி சாட்சி மலர்கொடி என்பவரை பார்த்து என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்துள்ளார், மேலும் எதிரி நாராயணசாமி சாட்சி மலர்கொடி என்பவரை பெண் என்று பாராமல் அசிங்கமாக திட்டி கல்லால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்துள்ளார் எனவே எதிரியின் இச்செய்கையானது சட்டப்பிரிவுகள் 294(b),324,506(i) IPC மற்றும் 4 of TNPHW Act ன் படி தண்டிக்கதக்க குற்றம் என்று பாப்பிரெட்டிப்பட்டி காவல் உதவி ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இந்நீதிமன்றம் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்து C.C.No.46/2023 என 06.06.2023–ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டவுடன் எதிரிக்கு இந்நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக அழைப்பாணை அனுப்பப்பட்டு எதிரி இந்நீதிமன்றத்தில் அழைப்பாணையின் பேரில் ஆஜரானவுடன் அரசு தரப்பு ஆவணங்கள் மற்றும் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு இலவசமாக கு.வி.மு.ச பிரிவு 207 கீழ் வழங்கப்பட்டு குற்றச்சாட்டுகள் வனைவதற்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

3. எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டபின் வழக்கு ஆவணங்களை கவனத்துடன் பரீசிலனை செய்தபோது எதிரி மீது குற்றச்சாட்டுகள் வனைவதற்கு போதுமான முகாந்திரம் இருந்தபடியால் எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 506(1) மற்றும் 4 of TNPHW Act ன் படி குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு குற்றங்களின் தன்மையை எதிரிக்கு படித்து விளக்கி கூறியபோது எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்து அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க வேண்டும் என கோரியதால் வழக்கானது அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க ஒத்தி வைக்கப்பட்டது.

4.அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 ஆகிய சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.6 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. அரசு தரப்பு சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>5. அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்</u>

(i)**அ.சா.1 மலர்கொடி** தனது சாட்சியத்தில் தான் தற்போது வரதகவுண்டனூரில் வசித்து கொண்டு வருகிறேன் என்றும், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், தங்கள் வீட்டிற்கு பக்கத்து வீட்டில் வசித்து வருகிறார் என்றும், கடந்த 28.03.2021 ம் தேதி காலை 7.30 மணியளவில் தான் தனது வீட்டு முன்பு வாசலுக்கு சாணி தெளித்து கொண்டு இருந்தேன் என்றும், ஆஜர் எதிரி தேவிடிய கண்டார ஓலி என்று தகாத வார்த்தைகாளல் திட்டி கல்லால் தலையில் அடித்து காயப்படுத்தினார் என்றும், இதனால் இரத்த காயம் ஏற்பட்டது என்றும், மேலும் எதிரி தான் வீட்டிற்குள் செல்லும்போது தன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார் என்றும், அடிப்பட்ட தன்னை தனது கணவர் சித்தையன் பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார் என்றும், சிகிச்சை பெற்று வந்து தான் பாப்பிரெட்டிப்பட்டி காவல் நிலைய போலீசாரிடம் புகார் கொடுத்தேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் தான் கொடுத்ததுதான் என்றும், அதில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கு தொடர்ந்த போலீசார் தன்னை விசாரனை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) **அ.சா.2 சித்தையன்** தனது சாட்சியத்தில் தான் தற்போது வரதகவுண்டனூரில் வசித்து வருகிறேன் என்றும், தான் சென்னை இரயில்வே துறையில் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுள்ளேன் என்றும், ஆஜர் எதிரி தனது பக்கத்து வீட்டில் வசிக்கிறார் என்றும், அ.சா.1 தனது மனைவி என்றும், கடந்த 28.03.2021 ம் தேதி தான் காலையில் வீட்டில் இருந்த சமயம் காலை சுமார் 7.30 மணியளவில் தனது மனைவி வாசல் தெளிக்க செல்வதாக கூறிவிட்டு வெளியில் சென்றார் என்றும், திடிரென தங்கள் வீட்டில் வாசல் படி அருகில் கத்தும் சத்தம் கேட்டது என்றும், தான் சென்று பார்த்தபோது தனது மனைவி தலையில் இரத்த காயம் ஏற்பட்டு இரத்தம் வழிந்துகொண்டு இருந்தது என்றும், ஆஜர் எதிரி மற்றும் அவரது மகன் மற்றும் மனைவி இருந்தார்கள் என்றும், தான் ஆஜர் எதிரி அடித்ததை பார்த்து எதற்காக எனது மனைவியை அடித்தீர்கள் என்று கேட்டேன் என்றும், அதற்கு எதிரி தான் அப்படிதான் அடிப்பேன் உனது மனைவியை கொல்லாமல் விடமாட்டேன் என்று

கூறினார் என்றும், பின்னர் அடிப்பட்ட தனது மனைவியை தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் என்றும், மருத்துவர் இல்லாததால் பாப்பிரெட்டிப்ட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றேன் என்றும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று மறுநாள் பாப்பிரெட்டிப்பட்டி காவல் நிலைய போலீசாரிடம் தனது மனைவி புகார் கொடுத்தார் என்றும், தான் அவருக்கு உதவியாக காவல் நிலையம் சென்றேன் என்றும், வழக்கு தொடர்ந்த போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) **அ.சா.3 தமிழ்ச்செல்வன்** தனது சாட்சியத்தில் தான் தற்போது வரதகவுண்டனுரில் வசித்து கொண்டு நெசவு தொழில் செய்து வருகிறேன் என்றும், சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதியம் தான் கடைக்கு சென்று விட்டு வீட்டிற்கு வந்து கொண்டிருந்தபோது அ.சா.1 ன் வீட்டு முன்பு போலிசார் தன்னை நிறுத்தி ஒரு கையொப்பம் கேட்டார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் தான் கையொப்பம் இட்டேன் என்றும், அன்றைய தினம் தான் கையொப்பம் இட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று தனக்கு தெரியாது என்றும், பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(iv) **அ.சா.4 ராமமூர்த்தி** தனது சாட்சியத்தில் தான் தற்போது வரதகவுண்டனுரில் வசித்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன் என்றும், சுமார் 3,4 வருடங்களுக்கு முன்பு அ.சா.1 க்கும் எதிரிக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு தொடர்பாக போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு படம் வரைந்து மகஜர் தயார் செய்தார்கள் என்றும், அந்த மகஜரில் தான் சாட்சியாக கையொபப்ம் செய்தேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், பார்வை மகஜர் அசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கு தொடர்ந்த பேலிசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(v) **அ.சா.5 ஆனந்தராஜ் (காவல் உதவி ஆய்வாளர்)** தனது சாட்சியத்தில் தான் தற்போது தருமபுரி உளவு பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 08.04.2021 ம் தேதி பாப்பிரெட்டிப்பட்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக இருந்தபோது வரதகவுண்டனூர் கிராமத்தை சேர்ந்த சித்தையன் மனைவி மலர்கொடி என்பவர் கொடுத்த எழுத்துபூர்வாமான புகாரின் அடிப்படையில் பாப்பிரெட்டிப்பட்டி காவல் நிலைய குற்ற எண் 135/2021 சட்டபிரிவுகள் 294(பி), 324,506(1) Sec 4 of TNPHW Act. படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும், தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன் என்றும், அன்றைய தினமே காலை 9.00 மணியளவில் இவ்வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் தமிழ்செல்வன், இராமமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன் என்றும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், சாட்சிகள் 1 முதல் 5 வரை உள்ளவர்களை தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், அன்றைய தினமே காலை 11.00 மணியளவில் எதிரியை அவரது வீட்டில் கைது செய்து நிலையம் கொண்டுவந்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன் என்றும், 30.06.2021 ம் தேதி வழக்கில் காயம் அடைந்த அ.சா.1க்கு சிகிச்சை அழித்த அசோக் அவர்களை விசாரித்து வாக்மூலம் பதிவு செய்து அவர் அளித்த காயச்சான்றிதழை பெற்றேன் என்றும், அன்றைய தினமே எதிரி நாரயணன் என்பவருக்கு எதிராக சட்டபிரிவுகள் 294(பி)324,506(1) Sec 4 of TNPHW Act படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(vi) **அ.சா.6 அசோக் (உதவி மருத்துவர்)** தனது சாட்சியத்தில் தான் தற்போது சேலம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவ கல்லுரியில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 28.03.2021 ம் தேதி தான் பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது மதியம் 12.30 மணியளவில் மலர்கொடி

க/பெ.சித்தையன் என்பவரை அவரது கணவர் சிகிச்சைக்கு அழைத்து வந்தார் என்றும், அவரை விசாரித்தபோது அவர் தன்னை தெரிந்த இரண்டு நபர்கள் அவரது வீட்டருகில் அன்றைய தினம் காலை 8.00 மணியளவில் கற்கலால் தாக்கியதாக கூறினார் என்றும், அவரை பரிசோதித்தபோது கீழ்கண்ட காயங்கள் தென்பட்டன என்றும், காயம்.1– பின்மண்டையில் 5x3 செ.மீ அளவிலான கிழிந்தகாயம் இருந்தது என்றும், அவரை பரிசோதித்து சிகிச்சை அளித்தேன் என்றும், மேலும் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என கருத்து வழங்கினேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் அ.சா.1 ன் காயச்சான்றிதழ் அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கு தொடர்ந்த போலிசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(vii) **அ.சா.7 மோகனஸ்ரீ** தனது சாட்சியத்தில் தான் தற்போது தனது கணவர் பணிபுரியும் வடமாநிலத்தில் தனது கணவருடன் வசித்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், தனது தாயாரின் வீட்டிற்கு எதிரில் வசித்து வருகிறார் என்றும், கடந்த 28.03.2021–ம் தேதி காலை 07.30 மணியளவில் தான் தனது தாயாருடன் வரதகவுண்டனூரில் இருந்தபோது தனது தாயார் வீட்டிற்கு முன்பு சானம்போட்டு வாசல் தெளித்துக்கொண்டிருந்தார் என்றும், தான் தனது தாயாருக்கு அருகில் தனது 2 வயது குழந்தையை இடுப்பில் வைத்து நின்றிருந்தேன் என்றும், ஆஜர் எதிர் தேவடியா முண்டை என்று தகாத வார்த்தைகாளல் தன்னையும் தனது தாயாரையும் ஆஜர் எதிரி திட்டினார் என்றும், அருகில் கட்டிட வேலை செய்ய வைத்திருந்த கல்லை எடுத்து வந்து தனது தாயாரின் தலையில் அடித்து காயப்படுத்தினார் என்றும், தனது தாயாருக்கு முகம் மற்றும் நெற்றியில் இரத்தம் வடிந்தது என்றும், தடுக்க சென்ற தன்னை எதிரி கீழே தள்ளிவிட்டார் என்றும், பின்னர் தனது தாயார் சம்பவ இடத்திலேயே மயங்கி கீழே விழுந்துவிட்டார் என்றும், எதிரி உங்கள் உயிருக்கு ஆபத்து இருக்கிறது உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டினார் என்றும், தான் தனது தாயாரை வீட்டிற்குள் அழைத்து வந்து தனது தந்தைக்கு போன் செய்து தனது தந்தை சித்தையன் வந்தபிறகு பாப்பிரெட்டிப்பட்டி மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் என்றும், வழக்கு தொடர்ந்த போலீசார் தன்னை விசாரணை செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமான சாட்சிய விவரங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(b) –ன் படி வினவியபோது எதிரி பொய்சாட்சி என்றும், இந்த வழக்கு பற்றி ஏதவாது சொல்லவேண்டுமா என்று வினவியபோது பொய் வழக்கு என்றும், அவர்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லையென்றும் கூறினார்கள்.

7. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்றும், எதிரி மீது பொய்யாக இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றும், அரசுத்தரப்பில் இந்த வழக்கு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லையென்றும், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து விடுதலை செய்யவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

**8. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றத்தை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதேயாகும்?**

**9. தீர்வு**

(i) இவ்வழக்கில் அரசு தரப்பில் பாதிக்கப்பட்ட சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 தனது சாட்சியத்தில் கடந்த 28.03.2021 காலை 7.30 மணியளவில் தான் தனது வீட்டின் முன்பு வாசலுக்கு சாணி தெளித்து கொண்டு இருந்ததாகவும் அந்த சமயத்தில் எதிரி அ.சா 1 ஐ பார்த்து தேவிடியா கண்டார ஒலி என்று தகாத வார்த்தைகளால் திட்டி கல்லால் தலையில் அடித்து காயப்படுத்தினார் என்றும், இதனால் இரத்த காயம் ஏற்பட்டது என்றும், மேலும் எதிரி தான் வீட்டிற்குள் செல்லும்போது உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார் என்றும் கூறி சாட்சியமளித்துள்ளார். மேலும் தனது குறுக்கு விசாரணையில் பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்தீர்களா என்றால் இல்லை என்றும், பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமனையில் போலிஸார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள் என்றும், மேற்கண்ட விசாரணையில் வாக்குமூலம் ஏதாவது பதிவு செய்தார்களா என்றால் பதிவு செய்தார்கள் என்றும், அதில் தான் கையொப்பம் செய்தேன் என்றும், அ.சா. 1

தான் மருத்துவமனையில் கொடுத்த வாக்குமூலம் இல்லையென்றால் சரிதான் என்றும் கூறி சாட்சியமளித்துள்ளார். மேற்கண்ட அ.சா 1 ன் சாட்சியத்தை கூர்ந்து கவனிக்கும்போது நடந்ததாக சொல்லப்படும் சம்பவமானது 28.03.2021 ம் தேதி காலை 07.30 மணியளவில் நடைபெற்றுள்ளது என்பதும், அ.சா.1 அன்றைய தினமே மதியம் 12.30 மணியளவில் பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்துள்ளார் என்பதும் தெரிய வருகிறது. ஆனால் புகாரானது 08.04.2021 ம் தேதி காலதாமதமாக பாப்பிரெட்டிப்பட்டி காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட புகாருக்கான கால தாமதத்தை பற்றி குறிப்பிட்டு எதையும் அரசு தரப்பில் கூறவில்லை. மேலும் இவ்வழக்கில் அ.சா.6 ஆக விசாரிக்கப்பட்டுள்ள மருத்துவர் தனது சாட்சியத்தில் அ.சா.1 ஐ இரண்டு நபர்கள் தாக்கியதாக தன்னிடம் கூறியதாக கூறியுள்ளார். ஆனால் அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரி மட்டும்தான் தன்னை தாக்கியதாக முன்னுக்கு முரணாக கூறி சாட்சியமளித்துள்ளார்.

(ii) இவ்வழக்கில் மற்றோரு கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா 7 மோகனஸ்ரீ தனது சாட்சியத்தில் இந்த வழக்கு சம்பந்தமாக போலிஸார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், நடந்ததாக சொல்லப்படும் சம்பவசமயத்தில் தான் வீட்டிற்குள் இருந்தேன் என்று தனது போலிஸார் விசாரணையில் கூறியிருந்தால் அது தவறு என்றும், சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் நேரத்தில் தனது தந்தை அ.சா.2 சித்தையன் சம்பவயிடத்தில் இல்லையென்றால் சரிதான் என்றும் கூறி தனது போலிஸார் விசாரணை மற்றும் முதல் விசாரணையிலிருந்து மாறுபட்டு கூறி சாட்சியமளித்துள்ளார். மேலும் மேற்கண்ட அ.சா.7 ன் சாட்சியத்தை கூர்ந்து கவனிக்கும்போது சம்பவத்தை நேரில் பார்த்த கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 சித்தையன் சம்பவயிடத்தில் இல்லை என்பது தெரியவருகிறது.

(iii) பார்வை மகஜர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில் தாங்கள் கையொப்பமிட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று தங்களுக்கு தெரியாது என்று கூறி சாட்சியமளித்துள்ளார்கள். எனவே பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவைகள் அ.சா.3 மற்றும்

அ.சா.4 ஆகியோர்களின் முன்னிலையில் தயார் செய்யப்படவில்லை என்பது மேற்கண்ட அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆகியோர்களின் சாட்சியங்களின் மூலம் தெரிய வருகிறது.

(iv) இவ்வழக்கில் எதிரி அ.சா 1 ஐ பொதுயிடத்தில் அசிங்கமாக பேசினார் என்பதை பொறுத்தும், அ.சா.1 ஐ ஒரு பெண் என்றும் பாராமல் எதிரி அசிங்கமாக பேசி கல்லால் அடித்து மானபங்கம் படுத்தினார் என்று சொல்லப்படும் குற்றச்சாட்டுகளை பொறுத்தும் அரசு தரப்பில் எவ்விதமான சாட்சியங்களையும் முன்நிறுத்தவில்லை.

(v) இவ்வழக்கில் அ.சா5 ஆக விசாரிக்கப்பட்டுள்ள ஆனந்தராஜ் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி ஆவார். அ.சா5 தனது சாட்சியத்தில் தான் செய்த புலன் விசாரணையை அனுசரித்து சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா 1 முதல் அ.சா 4 மற்றும் அ.சா.6 அ.சா.7 வரை உள்ளவர்கள் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை. எனவே எதிரி அ.சா.1 ஐ அசிங்கமாக பேசி, கல்லால் தலையின் மீது தாக்கி சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், கொலை மிரட்டல் விடுத்து, ஒரு பெண் என்றும் பாராமல் மானபங்கம் செய்ததாக சொல்லப்படும் குற்றச்சாட்டுகளை பொறுத்து அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூப்பிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

10. இறுதியாக, எதிரி மீது சுமத்தப்பட்ட பிரிவுகள் 294(b),324,506(1) இ.த.ச. மற்றும் 4 of TNPHW Act படியான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து, எதிரியை 294(b),324,506(1) இ.த.ச. மற்றும் 4 of TNPHW Act படியான குற்றச்சாட்டுகளிலிருந்து கு.வி.மு.ச. 248 (1) வது பிரிவின்கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறது.

11. இந்த வழக்கில் சொத்துக்கள் ஏதும் கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை எனவே சொத்துக்கள் குறித்து உத்தரவு எதுவும் இல்லை.

12. எதிரி எழுதிக்கொடுத்துள்ள பிணை பத்திரத்தை மேல் முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜுன் மாதம் – 05 ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

I SAMBATH
Digitally signed by I SAMBATH
Date: 2026.06.05 17:09:40 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பாப்பிரெட்டிப்பட்டி.**

**அரசு தரப்பு சாட்சிகள்**

அ.சா.1 – மலர்கொடி

அ.சா.2 – சித்தையன்

அ.சா.3 – தமிழ்செல்வன்

அ.சா.4 – ராமமூர்த்தி

அ.சா.5 – ஆனந்தராஜ் (காவல் உதவி ஆய்வாளர்)

அ.சா.6 – அசோக் (உதவி மருத்துவர்)

அ.சா.7 – மோகனாஸ்ரீ

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

**Judicial Form. 68**

| Sl.No. | Description to the exhibits and its date | Date when the exhibit was filed in the case | How Marked | By whom filed | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | புகார் | 21.03.2025 | அ.த.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2. | பார்வை மகஜர் முதலாவது கையொப்பம் | 15.10.2025 | அ.த.சா.ஆ.2 | அ.சா.3 | அசல் |
| 3. | பார்வை மகஜர் | 07.02.2026 | அ.த.சா.ஆ.3 | அ.சா.4 | அசல் |
| 4. | முதல் தகவல் அறிக்கை | 07.02.2026 | அ.த.சா.ஆ.4 | அ.சா.5 | அசல் |
| 5. | மாதிரி வரைபடம் | 07.02.2026 | அ.த.சா.ஆ.5 | அ.சா .5 | அசல் |
| 6. | அ.சா.1 ன் காயச்சான்றிதழ் | 02.03.2026 | அ.த.சா.ஆ.6 | அ.சா.6 | அசல் |

**<u>அரசு தரப்பு சான்று பொருள்</u>**:– இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்</u>**:– இல்லை

I SAMBATH Digitally signed by I SAMBATH Date: 2026.06.05 17:10:09 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பாப்பிரெட்டிப்பட்டி.**

**<u>குறிப்பு</u>** :

1. வழக்கின் முடிவு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. எந்த ஒரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைத்து விசாரிக்கப்படவில்லை.
3. வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.